பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 10 வெள்ளிக்கிழமை (26-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 234

# ஆனையிறவு படையினரின் காவல் அரண்கள் பல தகர்ப்பு

## நேற்றுப் பல முனைகளிலும் புலிகள் றொக்கட் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆனையிறவு படை முகாமைச் சுற்றி வளைத்திருக்கும் விடுதலைப் புலிகள் முகாமின் பல முனைகள் மீதும் நேற்று கடும் தாக்குதல்களை நடத்தினர்.

'றொக்கட் லோஞ்சர்'கள் மூலம் புலிகள் நடத்திய தாக்குதல்களில் பல காவலரண்கள் நாசமாகின.

நேற்றுப் பகல் 2 மணிக்குப் பின்னர் காவலரண்களை நாசப்படுத்தி ஆனையிறவு முகாமைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் இத்தாக்குதல் பெரிய அளவில் நடத்தப்பட்டது.

தாக்குதலில் பல காவல் அரண்கள் நாசமானதாக யுத்த முனையிலிருந்து பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ)

### புங்குடுதீவு கடற்பகுதியில்

## படையினரின் சடலங்கள் மேலும் 3 கரை ஒதுங்கின

புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக நேற்று நண்பகல் வரை மேலும் மூன்று கடற்படைச் சிப்பாய்களின் சடலங்கள் கரை ஒதுங்கின.

நேற்று முன்தினம் காலையும் ஒரு சடலம் கரை ஒதுங்கியது என்பது தெரிந்ததே.

ஒரு சடலம் நிர்வாண நிலையில் காணப்பட்டது. ஏனையவை கடற்படை சீருடையுடன் இருந்தன.

இன்னும் இரு சடலங்கள் புங்குடுதீவு கிழக்கு கடற்பகுதியில் வலைகளில் சிக்கி, பின்னர் தட்டிவிடப்பட்டதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அந்த இரு சடலங்களும் மண்டைதீவுப் பக்கமாக மிதந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிப்பாய்களின் சீருடைகளில் கடற்படையினருக்குரிய இலச்சினைகளும் (பட்ஜ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணையுமாறு சகல மக்களுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முழுமையாக இணைந்து செயற்படும்படி தமிழீழ மக்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட விரும்புவோர் அவ்வப்பகுதி பிரிவுச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் —

மேலதிக விவரங்களை கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் துணைப் படையில் சேருமாறும் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

துணைப்படையில் சேர விரும்புவோரும், முன்பு பயிற்சி எடுத்தோரும் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (உ)

## புலிகளிடம் அகப்பட்ட சிப்பாய்க்கு சிகிச்சை!

### செஞ். அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதிக்கு அருகே புல்லாவெளியில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற மோதல்களின்போது காயமுற்ற ஸ்ரீலங்கா சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த உபாலி என்ற இந்தச் சிப்பாயை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் நேற்று பார்வையிட்டதாகத் தெரியவருகிறது.

[ 6 ஆம் பக்கம் பார்க்க]

## திருவடிநிலைப் பகுதியில் பீரங்கிக் குண்டுத் தாக்கு!

சுழிபுரம், ஜூலை 26

கடற்படையினர் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் திருவடிநிலை, நெல்லியான், நீத்துவான் பகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

காரைநகர் கடற்படையினர் சுழிபுரம் சவுக்கடி கடற்பரப்பிலிருந்து இந்தப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதாக அறியப்படுகிறது.

திருவடிநிலையில் தமிழ் கலவன் பாடசாலை வளவில் பல பீரங்கிகுண்டுகள் விழுந்து வெடித்தன

எனினும் பீரங்கித் தாக்குதல் ஆரம்பமானவுடனேயே அதிபர் பாடசாலையை மூடி, மாணவர்களை வீட்டுக்கு அனுப்பியிருந்ததால், பின்னர் அடுத்தடுத்து விழுந்த குண்டுகளில் இருந்து மாணவர்கள் தப்பினர்.

நீத்துவான் பகுதியில் விழுந்த பீரங்கிக் குண்டுகளினால் சில வீடுகள் சேதமடைந்தன. (அ-28-15)

## உணவுக் கப்பல் வருகிறது!

யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ''வில்லி லில்லி'' கப்பல் நேற்று மாலை திருகோணமலையில் இருந்து புறப்பட்டதாக அறியவந்தது.

பிரஸ்தாப கப்பல் நேற்றிரவு பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த வாரம் பருத்தித்துறை வந்தும், உணவுப் பொருள்களை இறக்காமல் முதலில் காங்கேசன்துறைக்கும் அங்கிருந்து திருகோணமலைக்கும் சென்ற ''குமாரி'' என்ற கப்பல் இன்று அங்கிருந்து புறப்படும் எனவும் அறியவருகிறது. (அ-5)

## சிறந்த கெரில்லாத் தலைவர் பிரபா என்பது நிரூபணம்!

### செய்தி விமர்சகர் கருத்து

கொழும்பு, ஜூலை 26

உலகிலேயே மிகவும் பிரபலமான கெரில்லாத் தலைவர் தான் என்பதை விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் நிரூபித்து விட்டார்.

கொழும்பில் உள்ள பிரபல வெளிநாட்டு விமர்சகரும் லங்கா கார்டியன் ஆசிரியருமான மெர்வின் டி சில்வா முன்கண்டவாறு கூறியிருக்கிறார்.

அவர் எழுதி புதுடில்லியில் இருந்து பிரசுரமாகும் 'ரைம்ஸ் ஒப் இன்டியா' பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் திரு. மெர்வின் டி சில்வா கூறியிருப்பதாவது;

''......மிகவும் நுட்பமாக, இரண்டாவதாக திரு. பிரபாகரன் இரண்டு நவீன ஆயுதங்களை பயன்படுத்தி வருகின்றார். ஒன்று தொழில் நுட்பம் [Technology], மற்றது தகவல் தொடர்பு[Communiscation]

.........அவரின் வெற்றிகரமான கதை, இப்பிராந்தியத்திலேயே ஒவ்வொரு போராளித் தலைவருக்கும் ஒரு மொடலாக திரு. பிரபாகரன் விரைவில் விளங்குவார் என்பதையே காட்டுகிறது.

பாக்கு நீரிணையைத்

[6ஆம் பக்கம் பார்க்க]

## 2 ஆம் தவணைப் பரீட்சை ஒத்திவைப்பு என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இரண்டாம் தவணைக்குரிய பாடத்திட்டங்கள் இதுவரை சரியாகப் பூர்த்தி செய்யப்படாததால், இரண்டாம் தவணைப் பரீட்சை பின்போடப்பட்டிருப்பதாக வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தற்போது சில பாடசாலைகளில் மேற்படி பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றை தற்காலிகமாக நிறுத்தி, மூன்றாம் தவணை ஆரம்பத்தில் பரீட்சையைத் தொடருமாறும்—

மறு அறிவித்தல் வரை பாடசாலைகளைத் தொடர்ந்தும் வழமைபோல் நடத்துமாறும் அவர் அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஒ-5)

## போரை தலைவர் பிரபாவே நேரில் வழி நடத்துகிறாராம்

### கொழும்புப் பத்திரிகை கூறுகிறது

ஆனையிறவுப் போரை விடுதலைப் புலிகள் தரப்பில் அதன் தலைவர் திரு. வே. பிரபாகரனே நேரடியாக வழி நடத்துகின்றார் என்று இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்படி 'த ஐலண்ட்' பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

படையினர் முன்னேற முடியாதபடி விடுதலைப் புலிகள் தென்னை மரங்களில் மறைந்து இருந்து கொண்டு சினைப்பர் தாக்குதலை நடத்துகின்றனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் 'ஐலண்ட்' செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது. (உ-எ)

## மலையக தோட்டங்களிலும் இராணுவம் அட்டகாசம்!

கொழும்பு, ஜூலை 26

இராணுவ சீருடை அணிந்த கோஷ்டிகள் மலையகத் தோட்டங்களில் திடீர் திடீரென்று புகுந்து தமிழ் தொழிலாளர்களைத் தாக்குவதிலும்—

அவர்களின் உடைமைகளைக் கொள்ளையடித்துச் செல்வதிலும் பரவலாக ஈடுபடுகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டு இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த 825 – 20 அளவு உடைய நான்கு லொறி ரயர்கள் [ரியூப் மப்ளர் உட்பட] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாரியம்மன் மோட்டோஸ், கோப்பாய். (17451)

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F.R.C.P., D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

செவ்வாய் குற்றமற்ற இந்து சைவபோசன 31 வயது எக்கவுண்டன் (C. I. M. A.) மணமகனுக்கு மணமகள் தேவை. தரகர் இன்றி முழு விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். அ. உமாசங்கர், 19, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (17614)

## பிரார்த்தனை

விடுதலைப் புலிகள் வெற்றி வேண்டி

**26 – 07 – 91 இன்று**

அராலி கிழக்கு ஐயனார் கோயிலில் அபிஷேகமும், பிரார்த்தனையும்

**கடற்றொழில் அமைப்பினால்**

ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. (17615)

## விசேட அபிஷேகம்

வேலணை நுழைவாயில்

**பூர்வீக அதிசய வைரவர்**

தேவஸ்தானத்தில்

**செவ்வாய்க்கிழமை [30-07-1991] அன்று**

பகல் 12 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**ஆலய நிர்வாகத்தினர்**

(17616)

## நெடுந்தீவு மக்களுக்கு உலர் உணவு

யாழ்ப்பாணம், ஜூலை 23

கடந்த இரண்டு வாரங்களாக நெடுந்தீவுக்கான படகுச் சேவை தடைப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அங்கு செல்ல முடியாமல் குறிகாட்டுவானிலும் இதர பகுதிகளிலும் தங்கியுள்ள சுமார் 120 நெடுந்தீவைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான உலர் உணவு வகைகள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டன. (த)

## சாரணர் தலைவர் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்ட சாரணர் தலைவர்களின் விசேட பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். (த)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 08 — 1939

உதிர்வு: 06 — 08 — 1990

## அமரர் செல்லையா ஜெயசிங்கம்

அன்பின் அப்பா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்து விட்டது. ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

சிவசக்தி மில்ஸ்,
(உரிமையாளர்)
சூராவத்தை, சுன்னாகம் (17603)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 27 – 07 – 1967

ஆண்டவன் அடியில் 26 – 07 – 1989



## செல்வன், சி. கணேசநாதன்

**[அப்பன்]**

(ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன்]

காலத்தின் கோலத்தில் அப்பனே
நீயும் வாடி உதிர்ந்து விட்டாய்
காலம்தான் போனாலும் மறக்கவில்லை
காவியமாய் பதிந்து விட்டாய் எம் நெஞ்சில்
தீருமா எம்துன்பம் இவ்வாழ்வில்
திரும்பிவாரா ஊர்புகுந்த உன்னை எண்ணி
உன் ஆத்மா சாந்திபெற நாமும்
அஞ்சலித்து நிற்கிறோம் இந்நாளில்

உன் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

கிராமக்கோட்டடி,
புலோலி தெற்கு, புலோலி. (1761)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 13 – 10 – 1969

அன்னியர் அழிப்பு: 26 – 07 – 1989

திதி: 04 - 08 - 1991



செல்வன்

## பரமகுரு ஸ்கந்தகுமார்

(பழைய மாணவன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி)

எங்கள் அன்புச்செல்வமே! தம்பி!
தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை என்றும் பிரார்த்திக்கும்

**ஐயா, அம்மா, அக்கா,**
[illegible]

''முத்துமாளிகை''
பருத்தித்துறை. [illegible]

# அறிவித்தல்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் பரிபாலன சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இவ் ஆலயத்திற்கு அடியார்கள் வழங்க விரும்பும் நிதியையோ, அன்றேல் காணிக்கைப் பொருள்களையோ ஆலய காரியாலய கருமபீடத்தில் ஒப்படைத்து அதற்கான உறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

பிற நபர்களிடம் கொடுக்கப்படும் நிதிக்கோ, அன்றேல் காணிக்கைப் பொருள்களுக்கோ பரிபாலன சபையினர் பொறுப்பாளர்களல்லர் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்

**தொண்டிற்குரிய பரிபாலனசபை.**

(17607)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

அன்னையின் மடியில்: 1973-09-16

ஆண்டவன் அடியில்: 1991-06-26



## செல்வி வர்ணலா செல்லத்துரை

மாசிலாத புன்னகை மறைந்ததேன்?
பேசுமாயிரம் கதை முடிந்ததேன்?
நிலவுதித்ததைப் போன்ற உன்முகத்தினில்
கல கலப்புக் கவிதை மடிந்ததேன்?
ஆற ஓர் வழி சொல்லடி வர்ணலா!
அரற்று தெம்மனம் ஆறுதல் கூறடி!

உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்,
**ஐயா, அம்மா,**
**அண்ணாமார்:** மகேந்திரன், ஜேந்திரன்,
**அக்காமார்:** வசந்தி, வதனி, வனிதா, வத்சலா
**தம்பி:** சுவிந்திரன்

''பார்லேன்''
தெல்லிப்பழை. [17604]

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1936 – 09 – 28

மறைவு: 1990 – 8 – 6

## சுப்பிரமணியம் தர்மபாலன்

எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தெய்வமே உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

நினைவு கூரும்:
**அன்பு மனைவி**
திருமதி புவனேஸ்வரி தர்மபாலன்,
**பிள்ளைகள்**
பாலசௌந்தரி, பாலசாந்தினி [நோர்வே]
பாலறஞ்சன் [நோர்வே],
பாலஇந்திரன் [கனடா],
**உற்றார், உறவினர்கள்.**

இல. 4, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். [17582]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை இவ் வாரம் (21-7-91) எழுதிய அரசியல் கட்டுரையின் தொகுப்பாகும் இது.

# "சண்டே ரைம்ஸ்" சாடுகிறது:

# சிக்குண்டுள்ள படையினரை விடுவிக்கும் முயற்சி தோல்வி!

## இராணுவத்தின் 6 மாதத் திட்டமும் பிசுபிசுப்பாம்

ஆனையிறவு இராணுவ முகாம் மீதான முற்றுகையை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆரம்பிப்பதற்கு நான்கு வாரங்களுக்கு முன்னதாக—

முகாமுக்கு மிக அருகே அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் பதுங்கு குழி ஒன்றை நிர்மூலமாக்கச் சென்ற அரசுப் படையினரில் சுமார் 30 பேர் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

ஆனால் அச்சம்பவம் பெரிது படுத்தப்படாமற் போய்விட்டது.

குறிப்பிட்ட சம்பவம் நடந்த நான்கு வாரங்களின் பின்னர் தான், விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாம் மீதான முற்றுகையை முழு அளவில் ஆரம்பித்தனர்.

30 படையினர் கொல்லப்பட்டதான அச்சம்பவம் குறித்து அந்தச் சமயத்தில் ஏன கவனமாக ஆராயப்படவில்லை என்று இராணுவ பகுப்பாய்வாளர்கள் (Military analysts) கேட்டுள்ளார்கள்.

அந்தச் சம்பவம் குறித்து விசாரணை ஒன்று நடத்தப்பட்டிருப்பின் முற்றுகையைத் தவிர்க்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்து இருக்கமுடியும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

துரதிஷ்டவசமாக அது நடைபெறவில்லை. இறுதியில் ஆனையிறவு இராணுவ முகாம் முழுவதுமே விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளாக நேர்ந்தது.

### ஆயுதங்கள் புலிகள் வசமாகின

முகாமின் தென்கிழக்குப் பதுங்கு குழிகளை படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் முதலில் கைப்பற்றினர். அந்த இடத்தில் ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைக் கைவிட்டு விட்டு படையினர் வாபஸ் வாங்கவேண்டியதாயிற்று.

அதனால் வடமுனையில் படையினர் சிக்கவேண்டியதாயிற்று. முகாமின் தென்கிழக்குப் பகுதியைக் கைப்பற்றிய போது அங்கு இருந்த துருப்புகள் இன்னும் திரும்பவே இல்லை. தென்பகுதி படையினரில் ஒரு பிரிவினரே எஞ்சியுள்ளனர்.

### முயற்சி தோல்வி

தரை மூலம் படைகளை அனுப்பி முகாமில் சிக்குண்ட படையினரை விடுவிக்க எடுக்கப்பட்ட முயற்சி திட்டமிட்டபடி நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

துருப்புகள் நாளொன்றுக்கு 400 யார் முன்னேறவே திணறின.

முகாமை நோக்கி நகர்ந்து செல்லும் படையினருக்கு உலர் உணவு வகைகள் ஆகாய மார்க்கமாகவே போடப்படுகின்றன.

### விமான எதிர்ப்பு பீரங்கிகள்

விடுதலைப் புலிகள் பாவிக்கும் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் எந்த ரகம் என்பதை படையினர் இன்னும் கண்டு பிடிக்கவில்லை.

ஆனால் 30 மி. மீ. பீரங்கி (''கனன்'') ஆயுதங்களையே விடுதலைப் புலிகள் பாவிக்கின்றனர் என்று நம்பப்படுகிறது. இந்த ரகப் பீரங்கிகளில் விடுதலைப் புலிகளிடம் ஆகக் குறைந்தது பத்தாவது உள்ளன.

அண்மையில் தான் இவ் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர் என்று நம்பப்படுகிறது. இல்லை என்றால் ''அவர்கள் இந்த ரக ஆயுதங்களை யாழ். கோட்டை முற்றுகையின் போது பாவித்திருப்பார்களே'' என்று இராணுவப் பகுப்பாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதன் காரணமாகவே, 5,000 அடி உயரத்தில் இருந்து விமானப் படையினர் விடுதலைப் புலிகளுடன் மோத வேண்டியுள்ளது. முன்னர் 3 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விமானப் படையினர் தாக்குதலை நடத்தினர்.

### ஆனையிறவு செல்ல பல நாட்களாகும்

ஆனையிறவு முகாமில் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் படையினருடன் தரை மூலம் செல்லும் படையினர் இணைந்து கொள்ள பல தினங்கள் எடுக்கும். அந்த இணைப்பு ஏற்பட்ட பின்னர் தான் படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளின் விவரம் தெரியவரும்.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைவரத்தில தனது முழு உத்தி குறித்து அரசாங்கம் மீளாய்வு செய்யவேண்டும்.

கடந்த டிசம்பரில் இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகளின் வெற்றிக்கு ஆலயங்களில் விசேட பூசை

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்மா சாந்தியடையவும், களத்தில் போராடும் போராளிகள் வெற்றி பெற ஆசி வேண்டியும விசேட பூசைகள் இன்று வெள்ளிக்கிழமை குடா நாட்டின் பல பகுதிகளில் இடம் பெறுகின்றன

வட்டுக்கோட்டை ஸ்ரீ மங்களாம்பிகா வைமேத மஹாலிங்கேஸ்வர சுவாமி கோவிலில் காலை 10-00 மணிக்கு விசேட ஆராதனையும், பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் காலை 7-00 மணிக்கு பிரார்த்தனை அபிஷேகமும், கைதடி மத்தி அத்திலம்புலம் சந்தசுவாமி கோவிலில் பிற்பகல் 3-00 மணிக்கு அபிஷேகமும் இடம் பெறும்.

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் மாலை 4-00 மணி முதல் விசேட பூசையும், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் காலை 8-00 மணிக்கு சங்காபிஷேகமும், கொக்குவில் கிழக்கு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மகா கணபதி ஹோமமும் இடம் பெறும்.

புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் விசேட அபிஷேகமும், கரவெட்டி வடக்கு அந்திரான் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் நண்பகல் 12-00 மணிக்கு விசேட ஆராதனையும், கோண்டாவில் தில்லையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு விசேட சந்தனக் காப்பு அபிஷேகமும் இடம்பெறும்.

சுண்டுக்குளி, காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் உள்ள ஞான வைரவ கோயிலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஸ்நபனாபனா அபிஷேகமும்—

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் காலை 10 மணிக்கு காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் விசேட அபிஷேகம், கூட்டுப்பிரார்த்

[4ஆம் பக்கம் பார்க்க]

# புலிகள் வான் தாக்குதல் நடத்தினால் எதிர்கொள்ள அரச படை தயாராம்!

## பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சம் எதிரொலிக்கிறது

கொழும்பு, ஜூலை 26

வடபகுதி வானப் பிராந்தியத்தில் இனங்காணப்படாத விமானம் ஒன்று பறக்கக் காணப்பட்டது குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கை விமானப் படையினரை எச்சரித்துள்ளதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை கடந்த ஞாயிறன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த அடையாளம் தெரியாத விமானம் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி எச்சரிக்கையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் வான் வழியாக நடத்தக் கூடிய தாக்குதல் எதனையும் முறியடிக்கக்கூடிய நிலையில் தயாராக இருக்கும்படி விமானப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனராம்!

பாதுகாப்பு அமைச்சு இதற்காக புதிய ஆகாயப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது என்றும் ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இனந்தெரியாத நேசசக்தி ஒன்றிடமிருந்து விடுதலைப் புலிகள் விமானத்தை பெற்றுப் பயன்படுத்தலாம் என்று இராணுவ சிரேஷ்ட உயர் அதிகாரி ஒருவர் சொன்னார் என்றும் அச்செய்தி கூறுகிறது.

### சமாளிக்க தயாராம்

உள்நாட்டு அல்லது வெளிநாட்டுச் சக்திகளின் ஆகாயத் தாக்குதலைச் சமாளிக்க தமது விமானப் படை தயார் நிலையில் இருப்பதாக இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ரெறென்ஸ் குணவர்த்தனா கூறியிருக்கிறார்.

''விமானத்தை பயன்படுத்தி ஆகாயத் தாக்குதலை நடத்தும் வல்லமை விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் என்ற சாத்தியக்கூற்றை நாம் ஒருபோதும் நிராகரித்துவிட முடியாது. எந்தச் சவாலுக்கும் நாம் தயாராக இருக்கின்றோம்''— என்று அவர் மேலும் சொன்னார்.

### விமானிகள் கண்டனராம்

இதேவேளை—

[illegible]

கொண்டிருக்கும் ஆனையிறவுச் சண்டையில் குறைந்தது—

மிகச்சக்தி வாய்ந்த விமான எதிர்ப்பு பீரங்கி ஒன்றை— விடுதலைப் புலிகள் வைத்திருப்பதை இலங்கை விமானப் படை விமானிகள் கண்டனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு வேளையின்போதே இது கண்டுபிடிக்கப்பட்டதாக பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் (Defence analysts) தெரிவித்தனர்.

எதிரி விமானங்கள் வருவதை முன்கூட்டியே கண்டுபிடிக்க ராடார் சாதனங்கள் தற்போது இலங்கை விமானப் படையிடம் உள்ளன என்றும் ''சண்டே ரைம்ஸ்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-எ]

## அடையாளக் கார்ட்டுடன்

# பிரபாகரனின் படத்தை வைத்திருந்த அதிகாரி!

## இடமாற்றம் செய்யப்பட்டார்

சென்னை, ஜூலை 26

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் புகைப்படத்தைத் தமது அடையாளக் கார்ட்டுடன் வைத்திருந்த பொலீஸ் அதிகாரியை விசேட புலனாய்வுக் குழுத் தலைவர் திரு. கார்த்திகேயன் இடமாற்றம் செய்துள்ளார்.

அந்த பொலீஸ் அதிகாரி தமிழ்நாடு பொலீஸில் 'கியூ' கிளையில் பணிபுரிந்து வந்தார்.

தி. மு. க. ஆட்சியில் இருந்தபோதே அந்த பொலீஸ் அதிகாரிக்கு (9 8-89 அன்று) அடையாளக் கார்ட் வழங்கப்பட்டது.

இந்த விவரங்களை தமிழ் நாடு சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏயான வி. தண்டாயுதபாணி வெளியிட்டார். (உ-எ)


## ஆண் தாதியர் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் தாதியாக பணி புரிவதற்கும், நோயாளர்களைப் பராமரிப்பதற்கும் தாதிகள் தேவை.

★ வயதெல்லை:- 30 வயதுக்கு மேல்.
★ புதிதாக சேர்பவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்.
★ நியாயமான ஊதியம் வழங்கப்படும்.
★ உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:-

பாலம் பொதுப்பணி தொடர்பகம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/0308]

## மலிவு விற்பனை

காஸ்குக்கர்கள், பிளான்டர் & மிக்சிகள், சுவர்க் கடிகாரங்கள், மின்சார குக்கர்கள் & அயன், கேற்றில்கள், தையல் மெசின்கள், மின்சார விசிறிகள் வேறும் பல வீட்டுப் பாவனைப் பொருள்கள் யாவும் உடனடியாக மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

ஜெயா ஏல விற்பனைப் பகுதி

நவநீதம்

161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

[சி/0309)


## அறிவித்தல்

### நகர சபைகள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள்

நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றைச் சேர்ந்த சகல ஊழியர்களையும், சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுவினர்களையும், எனது காரியாலய ஊழியர்களையும் 27-7-1991 சனிக்கிழமை அன்று காலை 10:00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சு. டிவகலாலா
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

[சி/0307]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி பொன்னுத்துரை
[சொக்கர்]

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வீதியில் வசித்து வந்தவருமான அப்பாக்குட்டி பொன்னுத்துரை [சொக்கர்] நேற்று [25 - 7 - 91] சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம், முருகேசபிள்ளை, சுந்தராம்மா அவர்களின் சகோதரரும், சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரி, இராசமணி, பரமேஸ்வரி, கிருபானந்தவாலினி, வடிவேல், தங்கவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துக்குமாரசாமி, செல்வரெத்தினம், சிவலிங்கம், திருமதி செல்வராணி, திருமதி கலைவாணி, விருத்தாம்பாள், துரைராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், உமர்காந்தன், ஜெயகாந்தன், ரேணுகா, மேனகா, சிவாஸ்காந்தன், காயத்திரி, கிரிதரன், சுபேர்தரன், மயூரதன், சிந்துஜன், கினோசான், கிரிசாந்தி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [26 - 7 - 91] காலை 10 மணியளவில் அன்னாரின இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**
93/1, கைலாசபிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர். [17620]

## திரு. கனகசபை நாகேந்திரா
[இராசு]

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திரு. கனகசபை நாகேந்திரா கொழும்பில் காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கனகேந்திரா [Australia], திலகேந்திரா (Australia) ஆகியோரது தகப்பனாரும், கிருஷாந்தி, ராஜி ஆகியோரது மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, நடராசா, வாமதேவா ஆகியோரது சகோதரனும், அர்ச்சுனா, ரஜீவ், ஜனனி, ஐங்கரன் ஆகியோரது பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 25-07-91 வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு 22, நிமால் வீதி, பம்பலப்பிட்டியில் நடைபெற்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கௌரி தில்லைநாதன்**
(பெறாமகள்)
92, கோவில் வீதி,
நல்லூர். (17613)

## முத்துத்தம்பி நடராசா

அளவெட்டி சாயி மண்டலி தாபகரும், முன்னாள் அடைவு கடை உரிமையாளருமான முத்துத்தம்பி நடராசா அவர்கள் 24-7-1991 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் அளவெட்டி வடக்கு மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மாஜினி [U.S.A], Dr. வள்ளிகாந்தன் [மங்களூர்] ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ந. சிவராமகிருஷ்ணன் [U.S.A] அவர்களின் மாமனாரும், காலஞ்சென்ற கருணாகடாட்சி மற்றும் தியாகராசா, சிவராசா, நீலாயதாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சரஸ்வதி பொன்னையா, காலஞ்சென்றவர்களான நம்பியாரூரர், ஏகாம்பரம் மற்றும் வே. சிவஞானம், நகுலேஸ்வரி, பூமகள் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரசாந்த, கிஷான், பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை பொறளை கனத்தை மயானத்தில் நேற்று [25-7-91] வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நிகழ்ந்ததென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

12, கோபால் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.
(17452)

தகவல்:
**மு. தியாகராசா**
(சகோதரன்)

## திருமதி செல்லப்பாக்கியம் நடராசா

திருமதி செல்லப்பாக்கியம் நடராசா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி (T.O. கட்டிடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), நித்தியானந்தன் (மருந்தாளர், வைத்தியசாலை, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், வள்ளியம்மை, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி, வசந்தராதேவி ஆகியோரின் மாமியாரும், வாகீசன், ஹரேந்திரா, ஹேமதர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26-7-91) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
**பிள்ளைகள்**
(17453)

## விரைவு படை தலைவருக்கு காயம்

கொழும்பு, ஜூலை 26
திருகோணமலை மாவட்டம் — மணலாறு பகுதியில் விடுதலைப் புலிகளுடன் நடந்த சண்டையில் இராணுவத்தில் உள்ள விரைவு படையின (R. D. F.) தலைவரான கேணல் காமினி ஹெட்டியாராச்சி தலையில் பலத்த காயங்களுக்குள்ளானார்.

அவர் கொழும்பு நரம்புச் சத்திரசிகிச்சைப் பிரிவில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளார்.

1989 பிற்பகுதியில் ஜே. வி. பி. தலைவர்களைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உயர் இராணுவக் குழுவில் இவரும் அங்கம் வகித்தார். (அ-எ)

## புலிகளும் சிங்கங்களும்

கொழும்பு, ஜூலை 26
கொழும்பில் இருந்து வெளியாகும் ''ஒப்சேர்வர்'' மாலைத் தினசரி தனது 19 ஆம் திகதிய இதழில் ஆனையிறவு போர் பற்றி ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது.

ஆசிரியர் தலையங்கத்திற்கு ''ஆனையிறவில் புலிகளும் சிங்கங்களும்'' என்று தலைப்பிடப்பட்டிருந்தது. [உ-எ]

## கூட்டம்

யாழ். கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு வடமராட்சி முதலுதவி நிலையங்களில் பயிற்சி பெற்ற சகலருக்குமான விசேட கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி ம. ம. வித்தியாலய மகளிர் பிரிவில் நடைபெறும்.

★

யாழ்ப்பாணம், ஜூலை 26
நல்லூர் திரிசாரணர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும். [ஒ]

## சிக்குண்டு..

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணுவம் தயாரித்துக் கொடுத்த ஆறு மாத காலத்திட்டம் செயற்படுத்த முடியாத ஒன்றாகக் கருதக் கூடிய நிலை, இப்போது ஏழு மாதங்களின் பின்னர் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பாதுகாப்புப் படையினர் மீதான அழுத்தங்கள், குண்டு வெடிப்புகள் பற்றி கொழும்பு மக்கள் மத்தியில் நிலவும் அச்சுறுத்தல் ஆகியன பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை வலியுறுத்தலாம்.

''தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இலங்கை அரசு கட்டாயம் அங்கீகரிக்க வேண்டும். அப்போது தான் நிபந்தனையற்ற பேச்சுக்கு நாம் தயாராகுவேம்''— என்று திரு. அன்ரன் பாலசிங்கம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார்.

### யுத்தப் பேச்சை நிறுத்த வேண்டும்

விரைவான தீர்வு காண வேண்டும் என்ற தேவையை அரசு உணர்ந்து கொள்வதில் தான் அரசு சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமா என்பது தங்கியுள்ளது.

அரசின் சிந்தனை இராணுவ நடவடிக்கை பலனளிக்கும் தன்மையின் செல்வாக்குக்கு உட்பட்டதாக அமையும். இது இயற்கையே.

தற்போதைய நிலைமை குறித்து இராணுவ உயர் மட்டம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இதனைச் சுருக்கமாகவும், தெளிவாகவும்—

''யுத்தம் பற்றிப் பேசுவதை நாம் இப்போது நிறுத்தி விட்டு, [illegible] பற்றி பேசவேண்டும்''— என்று கூறினார். (அ-எ)

## போராளிகளின் வெற்றிக்கு..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனை ஆகியவையும்—

சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயத்தில் காலை எட்டு மணிமுதல் விசேட பூசையும் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை காலை சங்கானை வெல்லில் ஸ்ரீ சிவ சுப்ரமணிய கோவிலில் சங்காபிஷேகம் நடைபெறும். (த-30)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பாசக் கரங்களில்:
17 – 06 – 1966

பாசத்து நெஞ்சங்களில்:
26 – 07 – 1989

செல்வன்
## இராமசாமி சிறீபத்மநாதன்

பரு. ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும்], தேசிய தொழிற் பயிற்சி சபை டீசல் இயந்திர பொறியியல் மாணவனும் [வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறைசாலை]

உள்ளத்தால் இணைந்த
உடன்பிறப்பே
அன்பினால் அரவணைத்த - எம்
ஆசைச் சிறீயே - உன்
பாசத்தால் பதைக்கின்றோம்.
கடமைக்காக - நீ
கண்ணியமாய் சென்றவேளை
கொடியவரின் கொடுமையால்
கொடுமையாக - நீ
சாலைக்கு சென்றவேளை
சிலையானாய் ஆனாலும் உனது
நினைவுகள் எம்
காலமுள்ள வரை வாழ்ந்திருக்கும்.

ஓம் சாந்தி!!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**தந்தை, சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்,**

குரும்பசிட்டி,
புலோலி தெற்கு. [17592]

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா அருளானந்தம்
(ஆனந்தம்)

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்தவரும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான தனாதிகாரியுமாகிய செல்லையா அருளானந்தம் 25 - 07 - 91 அன்று காலமாகிவிட்டார். அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக்கணவரும், கார்த்திகேசுவின் அன்புச் சகோதரரும், கொக்குவில் மேற்கு செல்வநாயகப்பத்தரின் மருமகனும், விமலாதேவி, ஜீவானந்தன் [கட்டடப் படவரைஞர் நீர்ப்பாசன இலாகா, திருகோணமலை), செல்வகுமார் (தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜா (சுருக்கெழுத்தாளர் நீதிமன்றம் பருத்தித்துறை), கலாதேவி ஆகியோரின் மாமனாரும், கேதாரணி, துஷாந்தினி, ரஜீவன், கஜீபன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

606/1 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.
(17625)

தகவல்:
**செல்வகுமார்**
(மகன்)

## மு. முரளீதரன்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முரளீதரன் 8 - 7 - 91 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி, யோகராணி [கனடா] தம்பதிகளின் அருமை மகனும், திருக்குமரன் [கனடா], சுமித்திரா [கனடா], காலஞ்சென்ற ரஜிதா, காலஞ்சென்ற அருணோதயன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம், ஐயாத்தபிள்ளை, சோமசுந்தரம், உலகேஸ்வரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 7 - 91 அன்று கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தல்வல்,
**பொ. தருமரெட்ணம்**
367, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [17624]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நிபந்தனை விதிக்க தகுதி வேண்டும்

ஆனையிறவுப் போர் தொடங்கி பதினாறு நாட்கள் கடந்து விட்டன. அங்கு 800க்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா சிப்பாய்கள் விடுதலைப் புலிகளினால் முற்றுகை இடப்பட்டுள்ளனர். முற்றுகைக்குள்ளான தமது சகபாடிகளை மீட்பதற்காக வெற்றிலைக் கேணியில் தரை இறங்கிய ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் புல்லாவெளியுடன் திரும்பிச் செல்லவேண்டியதாயிற்று.

இத்தகைய ஒரு பின்னடைவுச் சூழ்நிலையில், பிரதமரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா, கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் மெதுவாக வாய் திறந்து இருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்களை நடத்தித் தீர்வு காணவேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக பழைய பல்லவியையே அவர் ஒப்புவித்திருக்கிறார். பேச்சுவார்த்தைக்கான அரசின் மிகப் பிந்திய நிபந்தனையையும் அவர் ஞாபகப்படுத்தி உள்ளார்.

அரசியல் குறிக்கோள்களை எட்டுவதற்கு ஆயுதங்களை உபயோகிப்பதில்லை என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தால் தான் இனி மேல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்பதே அந்த நிபந்தனை.

ஆனையிறவில் தமது பக்கம் வெல்வது கஷ்டம் என்பது தெரிந்தாலும், தாம் கீழே இறங்கிப்போகத் தயாரில்லை என்பதை அவர் ஞாபகமூட்டி இருக்கிறார்

தங்கள் இராட்சதப் படைகளால், ஆனையிறவை 15 நாட்களில் மீட்க முடியவில்லை என்றால், அது தோல்வியே என்று கணித்துக் கொள்ள அரசுக்கு மனம் ஒப்புவதாக இல்லை. எப்பாடுபட்டும், எத்தனை வாரம் சென்றாலும் ஆனையிறவை விட்டுக் கொடுக்காது தமது இராணுவ மேலாதிக்க நிலையை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று நினைக்கிறது. அதாவது இராணுவத் தீர்வில் தான் முழு நம்பிக்கையும் வைத்திருக்கிறது.

ஆனால் அரசியல் குறிக்கோள்களை அடைவதற்கு ஆயுதங்களை உபயோகிப்பதில்லை என்று விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது! இதனைப் போல ஒரு குதர்க்கமும், விதண்டாவாதமும் வேறு என்ன இருக்க முடியும்?

அரசுக்கு உண்மையாகவே பேச்சுவார்த்தைப் பாதையில் நம்பிக்கை இருந்தால், அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வை நாடப் போவதில்லை என்று முதலில் அதுவே அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பு மட்டும் போதாது. தமிழ் மண்ணில் இருந்து ஓர் இராணுவச் சிப்பாய் தானும் இல்லாமல் இராணுவத்தை வாபஸ் பெற்றுத் தனக்கு ஆயுத பலத்தில் நம்பிக்கை இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும்.

தமிழர்கள் எவ்விதத்திலும், எந்தக் கட்டத்திலும் இராணுவ அடக்குமுறைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திப் பிரகடனம் செய்ய வேண்டும். அந்தப் பிரகடனம் உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை அவதானிக்க சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

அவ்வாறு செய்து காட்டித் தனது பரிசுத்தத்தை நிரூபித்த பின்னர் தான், விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனை விதிக்கும் தகுதியை அரசு எய்த முடியும்.

# 14ஆம் திகதி களப்பலியான 139 போராளிகள் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

சுட்டைக்காட்டில் ஸ்ரீலங்காப் படையினர் தரை இறக்கப்பட்ட தினமான கடந்த 14 ஆம் திகதி கட்டைக்காட்டுப் பகுதியிலும் ஆனையிறவு முகாம் சூழலிலும் நடந்த சண்டையில வீரமரணம் அடைந்த 139 விடுதலைப் புலிகளின் விவரம் வருமாறு:

1. லவன் [துரைசிங்கம் இராஜ்சங்கர்]. கொழும்பு. 2. சோலை [சந்தியாப்பிள்ளை கிறிஸ்ரீயேந்திரன்] பருத்தித்துறை, 3. றெஜி [பொன்னையா பத்மநாதன] வடலியடைப்பு, 4. பாரத [இராஜதுரை குகதாசன்) உடுவில், 5. யாதவன் (கந்தையா கமலக்கண்ணன்) பாண்டியன் தாழ்வு, 6. குணேஸ் (செல்வராஜா பேரின்பமோகன்) அரியாலை, 7. பழனி (அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ்) பருத்தித்துறை, 8. கண்ணன் (தர்மன்பிள்ளை ஏகாமபரம்) களுவாஞ்சிக்குடி, 9. தவம் (அருளம்பலம் சௌந்தரராஜன்) மட்டக்களப்பு, 10. நியூட்டன் (கந்தையா தேவராஜா) காரைநகர்.

11. முகுந்தன் (தியாகராசா விக்கினேஸ்வரன்) தாளையடி, 12. லெ. மாக்கிரட் (சிற்றம்பலம் சாந்தி) உடுத்துறை, 13. (இராசரத்தினம் சிவரத்தினம்) நாவற்காடு, 14. ராஜசிங்கன் [ஆறுமுகம் திருச்செல்வம்) அம்பாறை, 15. வாணவர்மன் [ராஜப்புதேவ அருள்வாசகம் குணசீலன்] இளவாலை, 16. அருமை [கோபாலசிங்கம் தாதுலிங்கம்) மட்டக்களப்பு, 17. சந்திரன் (சங்கரப்பிள்ளை அன்பரசன்) நவாலி வடக்கு, 18. ஜெகன (கந்தசாமி சரவணபவன்) திருகோணமலை, 19. சூட்டி (சின்னத்தம்பி இராசு செல்வேந்திரன்) செருடாவில், 20. ஜாசிர் (கந்தசாமி [சின்னப்பொடி] சிவதாஸ்) மிருசுவில்.

21. கில் [சண்முகம் தபேந்திரன்) வவுனிக்குளம், 22. விக்னேஸ் [பாலசிங்கம் மால்மருகன்] வட்டுக்கோட்டை கிழக்கு, 23. காண்டீபன [வைரப்பிள்ளை உமாநேசன்] உடுத்துறை, 24. யூசி [ஆறுமுகம்பிள்ளை சிறுசுந்தரம்] நெடியகாடு, 25. லக்ஸ்மன் [கிருஷ்ணன் இராமச்சந்திரன்] அச்சுவேலி, 26. குழந்தை [செல்வராஜா ராஜகோபால்] ஏறாவூர், 27. செங்கண்ணன் [தங்கன ரகுநாதன்] நெல்லியடி, 28. வர்மன் [வெள்ளைச்சாமி ஆறுமுகம்] வேலங்குளம், 29. நாதன் [சின்னத்தம்பி யோகராசா] அம்பாறை, 30. ஜோன [ராசேந்திரம் உதயகுமார்] மூதூர்.

31. சிவபாலன் [சின்னத்தம்பி ஜெயராஜ்] சங்கானை, 32. கிலமன் [லோறன்ஸ் தனராஜ்] ஊர்காவற்றுறை, 33. கோபு [பத்மநாதன் கோபுநாதன்] இலக்கணாவத்தை, 34. ரமேஸ் [சின்னத்துரை சபேசன்] அளவெட்டி வடக்கு, 35. ராமன் [சக்திவேல் பாலகிருஷ்ணன்] திருவில், 36. ரவியன்பா [சுப்பிரமணியம் உருத்திரன்] மன்னார், 37. அங்கதன் [ஜெயத்திலக நிஸாந்தன்] சுன்னாகம் புளியந்தோட்டம், 38. நித்தியானந்தன் [சிவசிதம்பரம் சிவகுமார்] சுன்னாகம், 39. சுபையிர் [கந்தசாமி ராசேந்திரம்] அரியாலை கிழக்கு, 40. யாழன் [செல்லையா ரவி] வவுனியா.

41. அறிவொளி (கணேஸ் சுபாகரன்) கிளிநொச்சி, 42. சுதா (அர்யூன் மகேந்திரன்) திருமலை, 43. கீர்த்தி (சிவகுரு ரவிச்சந்திரன்) திருமலை, 44. பாரதி (சின்னத்தம்பி நந்தகுமார்) செல்வபுரம், 45. விமல் (கந்தசாமி பொடி குகதாஸ்) கொக்கட்டிச்சோலை, 46. விசித்திரன் (நிச்சிக்கர் வல்லிபுரநாதன்) மீசாலை வடக்கு, 47. டயஸ் (ஜஸ்ரீன்றோய் வெவியன்) ஊர்காவற்றுறை, 48. செல்லக்குட் (வீரகத்தி ரவிச்சந்திரன்) கரவெட்டி, 49. ஸ்ராலின் (செல்வராசா தியாகராசா) கொக்கட்டிச்சோலை 50. விஜி (சின்னப்பு சிவராஜினி) உரும்பராய்.

51. கோகிலா (குணநாயகம் மங்கையர்திலகம்) திருமலை, 52. சுரேந்தினி (பொன்னையா அமராவதி) திரியாய், 53. மேகன் (ஆறுமுகம் அரசரட்ணம்) திருமலை 54. சீலன் (குட்டி தெய்வேந்திரம்) புதுக்குடியிருப்பு, 55. நெல்சன் (கோபாலன் சுந்தரேசன்) நல்லூர், 56 மிராண்டா (வீரபுத்திரன் சுரேந்திரன்) திருகோணமலை, 57. அலெக்ஸ் (அழகு சத்தியசீலன்) குருநகர், 58. குருபரன (இராசையா சந்திரசேகரம்) எழுதுமட்டுவாள், 59 பாபு (கந்தசாமி ஆனந்தன்) கிரான், 60. பசுபதி (இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன்) தனங்கிளப்பு

61 ராஜேந்தர் (பொன்னுத்துரை ராஜேந்தர்) அடம்பன், 62. றொபின்சன் (திருமேனிப்பிள்ளை கிருபாகரன்) கொக்கட்டிச்சோலை, 63. சிதம்பர நாதன் (தம்பு ஆனந்தராஜா) கைதடி), 64. நிதி (சோமநாதன் நித்தியானந்த மூர்த்தி) கிளிநொச்சி, 65. குணராஜ் (அமுதலிங்கம் குமார்) கிளிநொச்சி, 66. டிலா (திலகப்பிள்ளை ஆனந்தி) முருங்கன், 67. பிரான்சிஸ் (கதிரவேல் குமரவேள்) கரவெட்டி, 68. (சைமன் அந்தோனி யோசப் மக்கன் பிரதீப்) மானிப்பாய், 69. குரு (பரராசசிங்சம் விமலேஸ்வரன்) யாழ்ப்பாணம், 70. சஜன் (சுந்தரராஜா மகேஸ்வரன்) வட்டுக்கோட்டை.

71. குமுதன் [வைத்திலிங்கம் தயாளன்] சிறுப்பிட்டி மேற்கு, 72. குரு [மாரிமுத்து தயாநிதி] கிளிநொச்சி, 73. அர்ஜின் [சிவானந்தன் நந்தகோபால்] திருமலை, 74. விஜி [செல்லத்துரை சிற்றம்பலம்] மட்டக்களப்பு, 75. பழனி [சின்னையா கணேசமூர்த்தி] தம்பலகாமம், 76. லலித் [வேல்முருகு விஜயகுமார்] திருமலை, 77. நேரு [சாம்பமூர்த்தி குமரேசன்] புத்தூர், 78. யூலியட் [ஆன் அனுஷியா மரியதாஸ்] கிளிநொச்சி, 79. நாகேஸ்வரி [பிரபாவதி சந்தான்] அடம்பன், 80. தர்சினி [றஞ்சினி அருளம்பலம்] கிளிநொச்சி.

81. எமல்டா [செல்லையா நிமலராணி] புதுக்குடியிருப்பு, 82. விஜயா [ஜெயவதனி தம்பிப்பிள்ளை] அல்வாய் தெற்கு, 83. கொலின் [சண்முகானந்தன் காந்தி] மயிலிட்டி, 84. ஸ்ரீதி [வைகுந்தவேல் சற்குணநேசன்] பருத்தித்துறை, 85. சோபிகா [பராசக்தி கந்தசாமி] ஏழாலை மேற்கு, 86. வானுமதி [செல்வக்குமாரி செல்வராசா] நெடுங்கேணி, 87. இலக்கியன் [கதிர்காமு ரவீந்திரராசா] அரியாலை, 88. கில்பேட் [மயில்வாகனம் விஜயகுமார்] திருமலை, 89. ராகுலன் [வேலாயுதம் ஜெயரூபன்] வாழைச்சேனை, 90. விக்ரம் [அருளானந்தம் சுந்தரராசா] விசுவமடு.

91. ஈழவன் [குமாரசாமி ரமேஷ்குமார்] வண்ணார் பண்ணை, 92. வரன் [சரவணமுத்து ரவிச்சந்திரன்] யாழ்ப்பாணம், 93. சந்தரநாயகி [வடிவேலு சிவமலர்] எழுதுமட்டுவாள், 94. அன்புதர்ஷ் [மாணிக்கம் தவயுதன்] திருமலை, 95. தாஸன் [வேலுப்பிள்ளை முரளிதரா] தண்ணீரூற்று, 96. குசோக் [தியாகராசா கிருபாகரன்] தெல்லிப்பழை, 97. டொமினிக் [அருள் ஆனந்தராசா] கிளிநொச்சி, 98. நளினி [இரத்தினராசா மேகலா) உரும்பராய், 99. சந்திரா [பொன்ராசா மல்லிகா] வவுனியா, 100. சுடரோன் [நடராசா ஜெகதீஸ்வரன்] தெல்லிப்பழை

101. விஷ்ணு (ஜோசப் செல்லையா தியாகு) வவுனியா. 102. அருள்ராஜ் (கந்தசாமி லிங்கமுதன்) திருமலை, 103. ஆலந் (கிருஷ்ண பிள்ளை தவராசா) கரவெட்டி, 104. எடிசன் (முருகு குமர்) திருமலை, 105. குயிலன் (துரைராசா ரசிகரன்) வல்வெட்டித்துறை 106. லோலோ (முல்லைநாதன் முரளீதரன்) புன்னாலைக் கட்டுவன், 107. குணா (வன்னியசிங்கம் புஷ்பராசா) புதுக்குடியிருப்பு, 108. பிலிப்ஸ் (செபஸ்தியான் றொக்சின்) குருநகர், 109. கோணேஸ் (மார்க்கண்டு தாமோதரம் பிள்ளை) புத்தூர், 110. வாசன் (சிங்கராசா குயின்ரன்) குருநகர்.

111. ஆரமுது (தங்கவேல் விஜயகுமாரி) மட்டுநகர், 112. மேகன் (பொன்னையா தமிழழகன்) நாவற்குழி கிழக்கு, 113. ஜெயா (முருகையா ஜெயசீலன) உருத்திரபுரம், 114. கருணா (நடராசா மகேந்திரன்) நெடுங்கேணி, 115. கந்தன் (பாலசிங்கம் ரமேஷ்) பருத்தித்துறை, 116. அல்வின் (சிவபாலன் கருணாசரன்) ஆரையம்பதி, 117. நளன் (சச்சிதானந்தம் நிர்மலன்) கல்முனை, 118. சிவாணி (சண்முகநாதன் ரோகினி) கொக்குவில், 119. வில்சன் (வேலுப்பிள்ளை சந்திரகுமார்) சங்கானைமேற்கு, 120. ரெட்ணராஜ் (ரெட்டி) (தம்பிப்பிள்ளை அந்தோனி தாசன்) மன்னார்.

121. அசோக் [வைத்திலிங்கம் கணேஷ்குமார்] மாங்குளம், 122. சங்கன் [சுப்பிரமணியம் கருணாநிதி] எழுதுமட்டுவாள், 123. ஜெயா [செல்லையா நடராசா] மட்டக்களப்பு, 124. மனோ (தியாகராசா மகேந்திரம்) அக்கரைப்பற்று, 125. சிவமூர்த்தி (மகாலிங்கம் சதீஸ்வரன்) புங்குடுதீவு, 126 கைலன் [ராமலிங்கம் ராஜீ] களுதாவளை), 127. சிவசங்கர் [ஜோசப் ஜெயமணி] வவுனியா, 128. விஜயன் [வேலுப்பிள்ளை மாரிமுத்து] கொட்டடி, 129. நகுலேஸ்வரன் [சிங்காரவடிவேல் தவக்குமார்] வல்வெட்டித்துறை, 130. கைலன் [அரியரட்ணம் குசந்தன்] வட்டுக்கோட்டை

131. நிஸாந்தன் [அருளானந்தம் யூட் அன்ரனி] நெடுந்தீவு மத்தி, 132. மணிவாசன் [கணேசநாதன் ஜனார்த்தனன்] இணுவில், 133. கில்பேட் [யோசப் ஜொனி], அன்புவழிபுரம், 134. ராஜபாரதி [நாகலிங்கம் சிறீதவானந்தன்] மகிழவெட்டுவான் வீதி, ஆயித்தியமலை, 135. காண்டி [கனகரட்ணம் கனகேஸ்வரன்] துணுக்காய், 136. வேணு [கந்தசாமி பிரபா] கல்லடி, 137. ஆனந்தன் [நேசா அமலதாஸ்] சுண்டுக்குளி, 138 தேவா [அற்புதநாதன் குகதாஸ்] ஏழாலை, 139 ஜேம்சன் [சாத்தையா ராமு] முறிகண்டி.

## இலங்கை தமிழருக்கு ஆயுள் தண்டனை

மதுரை ரயில் நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவ வழக்கில் ஓர் இலங்கைத் தமிழர் உட்பட இருவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

குண்டுவெடிப்புக் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். [இ-எ]

## சனியன்று இ. வங்கிகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி தவிர்ந்த ஏனைய அனைத்து இலங்கை வங்கிக் கிளைகளும் நாளை (சனி) காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை திறந்திருக்கும் என மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்கள் அன்று கொடுக்கல், வாங்கலில் ஈடுபட முடியும். (ஒ)

## 'கொப்பே'க்கு உதவியாக லக்கி

கொழும்பு, ஜூலை 26

வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேக்கடுவவுக்கு. உதவி கமாண்டராக பிரிகேடியர் லக்கி அஹங்கம நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## சாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 26

சாரண ஆசிரியர்கள், கடற் சாரணர்கள், திரி சாரணர்கள், உதவிப்பயிற்சியாளர்கள் ஆகியோர்களுக்கான விசேட கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் 2 மணி வரை வீதி ஒழுங்கும் பாதுகாப்பும் பற்றிய பயிற்சி நெறியும் இடம்பெறும். (த)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் போர்க்கால செயல்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக் கிழமை காலை 10-00 மணிக்கு வடமாகாண தெ. ப. பொ. கூட்டுறவு சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறும். (த)

## "ஆதாரம்" 3 ஆம் இதழ்

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சமூக, விஞ்ஞான பொருளாதார ஆய்வு இதழான ''ஆதாரம்'' சஞ்சிகை மூன்றாவது இதழ் வெளிவந்து விட்டது.

தமிழீழ ஆய்வு நிறுவனம் ஊடாகவும், தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாகவும் இது விற்பனையாகிறது. [இ]

## தமிழ் பாடசாலை தீக்கிரை

கொழும்பு, ஜூலை 26

பொலன்னறுவை மாவட்டம் - செவனப்பிட்டிய சரஸ்வதி தமிழ் பாடசாலையும் அதற்கு அருகில் இருந்த மூன்று வீடுகளும் அண்மையில் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

பாடசாலையில் இருந்த தளபாடங்கள் அனைத்தும் எரிந்து சாம்பராகிவிட்டன. உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. [உ-எ]

## சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

காயமடைந்த போராளிகளை பராமரிப்பது தொடர்பாகவும் மற்றும் உதவிகள் செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழினுட்ப நிறுவனத்தில் இன்று பி. ப. 2. 30 மணிக்கு நடைபெறும்

நிறுவன மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மாணவர் மன்றத்தினர் கேட்டுள்ளனர். [ஒ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார்த் தீவில் மட்டும் 125 பேரை காணவில்லை

கொழும்பு, ஜூலை 26
மன்னார்த்தீவில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் இந்த ஆண்டு மார்ச் வரையான காலத்தில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 154 பேரில் 125 பேருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று சர்வதேச மன்னிப்புச் சபைக்கு முறையிடப்பட்டுள்ளது.

மன்னார் பிரசைகள் குழு இது தொடர்பான அறிக்கை ஒன்றை மன்னிப்புச் சபைக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

கைது செய்யப்பட்டோரில் 29 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [உ-எ]

# இந்தியாவிலிருந்து ஆயுதம் கடத்த முயன்ற சிங்களவர்

கொழும்பு, ஜூலை 26
இந்தியாவில் இருந்து ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வர முயற்சித்ததாகக் கூறப்படும் இரண்டு சிங்களவர்களை களுத்துறைப் பொலீஸார் கைது செய்தனர்.

களுத்துறை வடக்கு கரையோரப் பகுதியில் வைத்து மாரவிலவைச் சேர்ந்த ஐவன் பெர்னாண்டோ, களுத்துறையைச் சேர்ந்த சுமித்ராஜா பீரிஸ் என்ற இந்த இருவரையும் பொலீஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர்களை இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி களுத்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு விசேட அடையாள அட்டை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் சகலருக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்து வருகின்றதாம்!

பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங்காட்டி ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

திருமலை மாவட்டத்தில் முதலில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும். (உ-எ)

# கல்முனை அகதி முகாம் தீ விபத்தில் 13 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 26
மட்டக்களப்பு மாவட்டம், கல்முனை அகதி முகாம் தீப்பற்றி எரிந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் முற்பகல் 10-30 மணியளவில் தீப்பற்றியது. மின் ஒழுக்கு காரணமாக தீப்பற்றியது என்று பின்னர் கூறப்பட்டது. (உ-எ)

### காவேரி நீர் தகராறு

# தமிழக, கர்நாடக அரசுகள் பொது வேலை நிறுத்தம்

சென்னை, ஜூலை 26
காவேரி நீர் தகராறு குறித்து கர்நாடக மாநில அரசும், தமிழக அரசும் தத்தமது நிலையை வலியுறுத்தும் முகமாக இன்று (வெள்ளிக்கிழமை) பொதுவேலை நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்து இருக்கின்றன.

போதுமான நீரை காவேரி ஆற்றில் இருந்து விட கர்நாடக அரசு மறுத்து வந்ததை எதிர்த்து, தமிழக அரசு செய்து கொண்ட முறைப்பாட்டை விசாரித்த, மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட நடுவர் மன்றம் குறிப்பிட்ட அளவு கூடுதல் நீரை தமிழகத்திற்கு விடும்படி கர்நாடக அரசுக்கு இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது.

அதனை ஏற்று செயற்படுத்த கர்நாடகஅரசுமறுத்து வருகிறது.

இதனை எதிர்த்தும் நடுவர் மன்ற இடைக்கால உத்தரவை அமுல் நடத்தக் கோரியும் தமிழக அரசு பொது வேலை நிறுத்தம் ஒன்றை மாநிலத்தில் இன்று (வெள்ளி) நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு நடுநிலையானதல்ல என்பதை வலியுறுத்தி இன்று (வெள்ளி) பொதுவேலை நிறுத்தம் ஒன்றை நடத்தப் போவதாக கர்நாடக இந்திரா காங்கிரஸ் அரசு அறிவித்துள்ளது.

# காங்கிரஸ் அரசுக்கு அ. தி. மு. க. எச்சரிக்கை!

புதுடில்லி, ஜூலை 26
காவிரி நீர்பங்கீடு பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசு அமுல் நடத்த தவறுமானால் அ. தி. மு. க வைச் சேர்ந்த எம். பிக்கள் அனைவரும் தங்கள்பதவிகளை ராஜினாமாச் செய்வர் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

நேற்று பிரதமர் பி.வி. நரசிம்மாவிடம் கையளித்த மகஜர் ஒன்றில் அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுத்தலைவர் ஜி. சுவாமிநாதன் இந்த எச்சரிக்கையை தெரிவித்திருந்தார்.

அ.தி.மு.க. வைச் சேர்ந்த எம். பிக்களின் ஆதரவுடனேயே இந்திரா காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியை அமைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## படையினரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களும்) காணப்பட்டன.

கடற்படையினர் பயணம் செய்த படகு ஆழ்கடலில் விபத்துக்குள்ளாகி, இவர்கள் மரணமாகி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஒ-125)

# 'ஒபரேஷன் லிபரேஷனை' விட 'பலவேகய' கஷ்டமானது!

## 'ஐலண்ட்' பத்திரிகை கணிப்பு

கொழும்பு, ஜூலை 26
1987 இல் வடமராட்சியில் அரசுப் படையினர் நடத்திய ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' இராணுவ நடவடிக்கையிலும் பார்க்க, ஆனையிறவு ''ஒப்பரேஷன் பலவேகய'' மிகவும் கஷ்டமானதாகும்.

இப்படி ''சண்டே ஐலண்ட்'' இம்மாதம் 21 ஆம் திகதிய இதழில் வெளியிட்ட விமர்சனக் கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இன்று எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர். அத்துடன் அவர்களிடம் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், வேறு நவீன ஆயுதங்களும் உள்ளன.

1987 இல் ''ஒப்பரேஷன் லிபரேஷனை'' நடத்துவதற்கு இராணுவத்திடம் ஒரு தளம் இருந்தது. ஆனால் ''ஒப்பரேஷன் பலவேகய''வை நடத்துவதற்கு இராணுவத்திடம் தளம் எதுவும் அப்பகுதியில் இல்லை. முதலில் தளம் ஒன்றை அமைத்துக் கொண்டு பின்னர்தான் ஆனையிறவை நோக்கி முன்னேற வேண்டியுள்ளது. அந்தத் தளத்தைத் தமது கட்டுப்பாட்டிலும் இராணுவம் வைத்துக்கொள்ளவும் வேண்டியுள்ளது.

இராணுவ நடமாட்டங்களை அவதானிக்க, விடுதலைப் புலிகள் போராளிகள் இரவு நேரங்களில் மரங்களின் உச்சிகளில் ஏறி மறைந்து இருக்கின்றனர்.

தென்னை மரங்களில் இரவு நேரங்களில் மறைந்து இருக்கும் போராளிகள் மறுநாள் காலை இறங்கி வருவதை அரசுப் படையினர் அவதானித்து இருக்கின்றனர்— இப்படி அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. [அ-எ]

## வி. பி. சிங் ராஜினாமா செய்வார்

புதுடில்லி, ஜூலை 26
ஜனதா தள் கட்சிக்குள் உட்பூசல் வெடித்ததை அடுத்து நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவியை தாம் ராஜினாமாச் செய்ய இருப்பதாக முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங். அறிவித்துள்ளார்.

ஜனதா தள் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடும் போது தாம் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அவர் தெரிவித்தார். [அ]

## நடைபெறாது

யாழ்ப்பாணம், ஜூலை 26
இன்று காலை 9 மணிக்கு யாழ். அரச செயலகத்தில் நடைபெற இருந்த ப. நோ. கூ. சங்கங்களில் நெல் கொள்வனவு சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## புலிகளிடம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

24 வயதுடைய உபாலி காலியைச் சேர்ந்தவராவார்.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் புல்லாவெளியில் நடந்த மோதல்களில் நூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர் என்பதும், முன்னூறுக்கு அதிகமான படையினர் காயமுற்றனர் என்பதும், உயிரிழந்த 29 சிப்பாய்களின் சடலங்களைப் புலிகள் கைப்பற்றினர் என்பதும் தெரிந்ததே. (உ)

## சிறந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாண்டுவது அவருக்கு ஒரு சாதாரண விஷயமே. தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளால் திரு. பிரபாகரன் பாதிக்கப்படவில்லை......''

—இப்படி திரு. மெர்வின் [illegible] கூறியிருக்கிறார்.

# அகதிகளுக்கிடையிலான மோதலில் ஒருவர் பலி

சென்னை, ஜூலை 26
தமிழ்நாடு, கும்மிடிப்பூண்டு அகதிமுகாமில் இரண்டு இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இடையே ஏற்பட்ட சண்டையில் சிதம்பரம் என்ற அகதி மரணமானார்.

அந்தோனி, லோகநாதன், அனிபால் ஆகிய அகதிகளை பொலீஸார் இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்து காவலில் வைத்தனர்.

சென்னை அருகே கும்மிடிபூண்டியில் 'கிப்கொட்' தொழிற்சாலை அருகே உள்ள இந்த முகாமில் சுமார் ஆயிரம் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடனாக வாங்கப்பட்ட பணம் தொடர்பாகவே அகதிகளுக்கு இடையே தகராறு மூண்டதாகக் கூறப்படுகிறது.

### கடத்தப்பட்டதாகக் கருதப்படும்

# 9 தோட்ட தொழிலாளரும் பொலீஸ் நிலையத்தில்!

கொழும்பு, ஜூலை 26
நுவரெலியாவில் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் ஒன்பது தமிழ் தோட்டத் தொழிலாளர்களும் நுவரெலியா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

வாகனம் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் இவர்கள் ஒன்பது பேரும் வழி மறிக்கப்பட்டு, கடத்திச் செல்லப்பட்டனர் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது.

கடத்திச் செல்லப்பட்டவர்களில் ஏழு பேர் தொழிற்சங்கம் ஒன்றின் உறுப்பினர்கள் ஆவர்.

கடந்த ஒன்பதாம் திகதி இவர்கள் கடத்தப்பட்டனர்.

# 13 இராணுவத்தினர் மீது துரோகக் குற்றச்சாட்டு!

பொருளாதாரத் தடையை மீறி, தடை செய்யப்பட்ட பொருள்களை வட பகுதிக்கு அனுப்ப உதவியதாகக் கூறப்படும் 13 இராணுவத்தினர் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பாதுகாப்பு வட்டாரம் கூறியதாக ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (உ-எ)

# 'பாலம்' கலந்துரையாடலில் ஆர்வத்துடன் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 26
காயமடையும் போராளிகளை பராமரிப்பது தொடர்பான சமூக அமைப்புகளின் கலந்துரையாடல் நேற்றுக் காலை 'பாலம்'' பணிமனையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. சலீம் தலைமையில் நடைபெற்றது.

நூறுக்கு மேற்பட்ட சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆர்வத்துடன் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

பங்குபற்றிய சமூக அமைப்பின் பிரதிநிதிகளை, போராளிகளைப் பராமரிக்க விரும்புவோரின் பெயர்ப் பட்டியல்களுடன் இன்று மாலை 4 மணிக்கு அல்லது நாளை காலை 10 மணிக்கு பாலம் பணிமனைக்கு வருமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய கலந்துரையாடலில் கலந்து கொள்ளாத பிரதிநிதிகளை இன்று காலை பாலம் பணிமனைக்கு சமுகம் தருமாறு திரு. சலீம் கோரியுள்ளார். [உ]

# சூரிய மண்டலத்துக்கு வெளியே புதிய கிரகம்!

## விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

சூரிய மண்டலத்திற்கு வெளியே முதல் தடவையாக புதிய கிரகம் ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

பூமியிலும் பார்க்க பத்து மடங்கு பெரிதான இக் கிரகத்தில் உயிரினங்கள் இருக்கும் சாத்தியம் மிகக் குறைவு என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சூரிய மண்டலத்திற்கு வெளியே இன்னும் கண்டுபிடிக்கப்படாத கிரகங்களில் உயிரினங்கள் இருக்கக் கூடியதான வாய்ப்பு அதிகரித்துள்ளதாக பிரிட்டிஷ் வான வியல் விஞ்ஞானி டாக்டர் அண்ட்ரு லைனிங் லண்டனில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சூரியமண்டலத்திற்குவெளியே பால்வழி [Milkyway] நடுப் பகுதியில் அமைந்துள்ள இப் புதிய கிரகம் பூமியில் இருந்து இருபது முதல் 30 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளதாக லண்டனில் நேற்று வெளியான 'நேச்சர்' சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்சர் [Pulsar] குறுங்கோள் ஒன்றை இக்கிரகம் சுற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org